★ பக்கங்கள் 8 விலை சதம் 40

PERIODICALS ... LIBRARY

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 10 ஐ-அகிர்: 26 இதழ்: 104
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-5-79

## தஞ்சையில் அன்பில் தி, மு. க. வேட்பாளர்!

சென்னை, மே 23

தஞ்சாவூர் லோகசபைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் திரு. அன்பில் தர்மலிங்கம் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இத்தொகுதியில் இதுவரை 24 பேர் வேட்பு மனுத் தாக்கல்செய்துள்ளனர்.

நாகபட்டினம் தொகுதியில் 6 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

தஞ்சாவூரில் அ இ அண்ணா தி மு கழகம் சார்பில் வேட்பாளர் எவரும் மனு தாக்கல் செய்யவில்லை.

காங்கிரஸ் ஐ கட்சியின் சார்பில் திருமதி இந்திரா காந்தி இங்கு போட்டியிடக் கூடும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் இங்கு போட்டியிடுவதில்லை என்று முடிவுசெய்துவிட்டமையால் திரு எஸ் சிங்காரவடிவேல் என்பவர் வேட்பு மனு தாக்கல்செய்துள்ளார், திரு ஜோன்சன் என்பவர் காங்கிரஸ் ஐ கட்சியின் அதிருப்தியாளராகப் போட்டியிடுகிறார்.

தி மு கழகத்தினர் சார்பில்

(6-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் பிரச்னையில் யு. எஸ். அதிபரைத் தலையிட்டு தீர்க்குமபடி வற்புறுத்து

## மாஸாச்சுசெட்ஸ் மாநில நாடாளுமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னையில் அமெரிக்க அதிபரும் காங்கிரஸ் சபையும் தலையிட்டுத் தீர்த்துவைக்கவேண்டும் என்று அமெரிக்க மாஸாச்சுசெட்ஸ் மாநில பாராளுமன்றம் வற்புறுத்தியுள்ளது. இந்த மாநிலத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும் தீர்மானம் ஒன்றின் மூலம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன.**

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி இரு சபைகளிலும் இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் உரை நிகழ்த்தினார்.

இச் சபைகளுக்கு திரு. சிவசிதம்பரம் விஜயம் செய்த பொழுது அரசாங்கத் தலைவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற வரவேற்பு அளிக்கப்பட்டது இச்சபைகளின் சபாநாயகர்கள் அவரை வரவேற்று உரை நிகழ்த்தும்படி கேட்டுக் கொண்டனர்.

திரு. சிவசிதம்பரத்துக்கு மக்கள் சபைகளில் வரவேற்பளிக்கவும், அங்கு அவர் உரை நிகழ்த்தவும் மாநில கவர்ணர் திரு ஏட்வாட்கில் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து கவர்ணர் மாளிகையில் திரு. சிவசிதம்பரத்துக்கு கவர்ணர் விருந்தளித்துக் கௌரவித்ததுடன் மக்கள் பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும் நிறைவேற்றிய தீர்மானங்களின் பிரதிகளையும் அவரிடம் கையளித்தார்.

இத்தீர்மானங்களின் பிரதிகள், ஜனாதிபதி திரு. ஜிம்மி காட்டர், காங்கிரஸ் சபைத் தலைவர், ஐ. நா. பொதுச் செயலாளர் போன்றோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மாஸாச்சு செட்ஸ் மாநிலத்தில் மே மாதம் 22-ம் திகதி 'ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்' தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

### சிவா உரை

மேற்படி இருசபைகளிலும் திரு. சிவசிதம்பரம் பின்வரும் சாரப்படி உரைநிகழ்த்தினார்.

ஈழத் தமிழர் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையென்று இல்லாமல் இன்று உலக மக்கள் எல்லாரது கவனத்தையும் ஈர்ந்துளளது. சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் விரும்பும் அமெரிக்க மக்களாகிய நீங்கள் எமது பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் ஆர்வம் கொண்டிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஈழத் தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகமக்க

(6ம் பக்கம் பார்க்க)

## 4 மாதமாகச் சம்பளமற்றிருக்கும் இந்த ஆசிரியர்களின்பிரச்னை

### ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை பகிஷ்கரிப்பை தொடர்ந்து வேலைநீக்கம் செய்யப்பட்டு கடந்த நாலுமாதமாக சம்பளம் இன்றி அல்லலபடும் ஆசிரியர்களுக்கு நீதி வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்க வடபிராந்தியத் தலைவர் திரு ச கி. சுந்தரலிங்கம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; இந்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை பகிஷ்கரிப்புக்கும் எதுவித தொடர்புமில்லை இந்த ஆசிரியர்கள் தங்கள் சொந்தக்காரணங்களுக்காகவும் வைத்திய லீவில் நின்றவர்களுமே கடந்த நாலுமாதமாக சம்பளம் இன்றியும் வேலையற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

வேலையில் நின்று நீங்கியதாகக் கருதப்படும் ஆசிரியர்களின் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கும்படி கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டபோது மேற்படி ஆசிரியர்கள் உடனடியாக அரசாங்க வைத்தியர்களிடம் இருந்து வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெற்று சமர்ப்பித்து நாலு மாதமாகியும் இதுவரை எது விதபதிலும் இல்லாது கஷ்டப் படுகின்றனர்.

இவ் ஆசிரியர்களை குற்றவாளியாகக் கருதினால் இதுவரை இவர்கள் மீது குற்றப் பத்திரிகை எதுவும் சமர்ப்பிக்கப்படவுமில்லை; விசாரணை எதுவும் நடத்தவுமில்லை தம்களுக்கு மீண்டும் வேலைகிடைக்

(6ம் பக்கம் பார்க்க)

---

தமிழர் பிரச்னை பற்றி ஆராய

## ஜே. ஆர். தலைமையில் மந்திரிகள் உப குழு

(கொழும்பு)

வடக்கு. கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்காக மந்திரிசபை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் இயங்கும் இக்குழுவில் தமிழ் அமைச்சர்களான இருவாளர்கள் எஸ். தொண்டமான் செ. இராசதுரை, தேவநாயகம் மற்றும் நீர்ப்பாசன, மகாவலித் திட்ட அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா, இளைஞர் விவகார அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் அங்கம்வகிப்பர்.

நேற்று மாலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உப குழு நியமிக்கப்பட்டது. (ம)

## இளைஞர் படுகொலை! 11 பேர் கைது!

[வேலணை]

பயங்கர ஆயுதங்களினால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலையுண்ட சம்பவம் வேலணையில் நிகழ்ந்துள்ளது

நேற்று முன்தினமிரவு வேலணை வங்களாவடி சந்தியில் நடைபெற்ற இப் பரிதாப சம்பவத்தில், வேலணை நாவலடிப்புலத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிறீதரன் (28வயது) என்பவரே கொலையுண்டவராவார். இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது:

வீதியால் சென்றுகொண்டிருந்த லொறியொன்றை மறித்த இளைஞர் ஒருவர் தன்னை திருநீலகண்டன் பாஸ்கரன் என்று அறிமுகப்படுத்திய பின், தான் ஒருவரை கொலை செய்துவிட்டதாகவும் பொலிசிற்கு தெரிவிக்கும்படியும் கூறியதாக பொலிசில் முறைப்

[2ம் பக்கம் பார்க்க]

## பேராசிரியர் செல்வநாயகம் மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் நடைபெற்ற விபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பேராசிரியர் எஸ். செல்வநாயகம் அகால மரணமானார்.

## தாலிக்கொடி, கைக்கடிகாரம் துப்பாக்கிமுனையில் கொள்ளை

### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி முனையில் 25,000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியும், 350 ரூபா பெறுமதியான கைக்கடிகாரமும், கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் திருநெல்வேலியில் நடந்துள்ளது

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்து விற்பனை நிலையத்தை பூட்டிவிட்டு, உரிமையாளரும் மனைவியும் வீடு சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடந்துள்ளது

இரவு 10 மணியளவில் அம்மன் கோவிலடி வழியாக காரில் சென்றுகொண்டிருந்தபோது முன்னால் வந்த காரிலிருந்து 3 இளைஞர்கள் துப்பாக்கியுடன் இறங்கி பயமுறுத்தி பணத்தை தருமாறு கேட்டதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது

பணமில்லை என்று உரிமையாளர் கூறியதும் முன்ஆசனத்திலிருந்த பெண்ணின் தாலிக்கொடியை ஒரு இளைஞர் இழுத்துப்பறித்ததாகவும், அச்சமயம், கொடியின் ஒருபகுதி இளைஞன் கையிலும் மற்றப் பகுதி பெண்ணின் கையிலும் அகப்பட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

உடனே மற்ற இளைஞன் 'குத்தடா' என்று கூறியதும், அப்பெண் பயத்தினால் ஒருபகுதிக்கொடியையும் கொடுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது

இச்சம்பவத்தின்போது பெண்ணின் கைக்கடிகாரத்தையும், இளைஞர் பறித்துக் கொண்டு சென்றுவிட்டனராம்

இளைஞர்கள் சாம்பல்நிற 'ஏ 40' காரில் வந்ததாகவும் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. [க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மண்ணெண்ணெயில் கோழிக் குஞ்சு பொரிக்கும் மிசின் பெட்டி இரண்டு விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளவும். க. செ. இருதயம், 98, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 2537

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 31 ஸ்ரீ 2188 டீசல் மொறிஸ் மறினு (மெற்றலிக் நீலம்) பிற்பகல் 2-00 மணி தொடக்கம் பார்வையிடலாம். விலாசம்: செ. ராஜநாயகம், ஊரங்குனை, கட்டுவன், தெல்லிப்பழை. 2530

## தேவை

பிடவைக்கடைக்கு பெண் விற்பனையாளர்தேவை. நேரில் வரவும். வேல் முருகன் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி கைதடி 2534

## FOR SALE

Limited Copies of Encyclopaedia Brittanica and Children's Brittanica available shortly. Write for Catlogue. P V. Srirangan, 754, Hospital Road, Jaffna. 2541

## நினைவு அஞ்சலி

### ஜெயமைதிலி

எங்கள் அன்பின் செல்வமே எங்கள் உள்ளம் எல்லாம் நிறைந்த ஒளிவிளக்கே உன் பிரிவு தாங்காது அம்மா, அப்பா, பெரியண்ணு, சின்னண்ணு, அப்பப்பா, அப்பம்மா ஐயா, அம்மம்மா, ஆச்சி, சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், அத்தை, சித்தி, அத்தைமாமா, மைத்துனிமார் மீளாத்துயரில்வெந்து நலிகின்றோம். இறைவன் திருவடி சேர்ந்த உன்னை இன்று 31-ம் நாள் அஞ்சலி செய்கின்றோம். சி. மகாலிங்கம் சரவணை மேற்கு வேலணை. 2538

க. பரமசிவம்பிள்ளை
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்
பலாலி ரோட்,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மானிப்பாய் ரோட்டு 142-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற. சுல்தான் அப்துல் காதர் அப்துல் சலாம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

சுல்தான் அப்துல் காதர் அப்துல் ஸலாம் கைம்பெண் முகமதி ஹௌத் றபீகா 142, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

மரணசாதன }
நியாயாதிக்கம் } இல. 3450.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி முற்பகல் 10.00 இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979 வைகாசி 15-ம் திகதி.
தயாரித்தது:

க. பரமசிவம்பிள்ளை
மனுதாரரின் பதிவுபெற்ற தரணி. 2536

## வெளிவந்துவிட்டன!

- பாரதச் சுருக்கம்
  ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை விலை: 10-00
- சுந்தரகாண்டம் – காட்சிப்படலம்
  (முழு நூல்) வேந்தனார் உரை விலை: 12-00
- இந்து சமயபாடம் (அச்சில்)
  (சொக்கன்)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
234, கே. கே. எஸ் வீதி — யாழ்ப்பாணம் 2531

## அ. இ. தமிழ்க் காங்கிரஸ்

### (சாவகச்சேரித் தொகுதி)

சாவகச்சேரி, மிருசுவில், வரணி, கச்சாய், கைதடி, நாவற்குழி கிராம சபைகளுக்கான தேர்தல் ஆலோசனைக் கூட்டம்
இடம்: ''சரஸ்வதி பூங்கா'' - சாவகச்சேரி
காலம்: 26-05-79 சனிக்கிழமை பி. ப. 02-00 மணி
அன்புடன் அழைக்கின்றோம்.

யோ. ஜெயக்குமார்
(கிளைச் செயலாளர்)

2532

## சர்க்கரைப் பூசனிக்காய் தேவை

(YELLOW PUMPKINS)

ஐந்து கிலோச்களுக்கு கூடிய நிறையுள்ள சர்க்கரைப் பூசனிக்காய் பெருமளவில் தேவை.

தொடர்பு:

திரு. C நடராஜா
இல: 6 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7605 (2535)

திரு. A மகேந்திரன்
கைத்தொழில் பேட்டை,
அச்சுவேலி,
தொலைபேசி: 218

## பண்ணிசைக் கச்சேரி

[யாழ்ப்பாணம்]

யாழ். நுண்கலை மன்றத்தின் ஆதரவில் திரு. வி. ரி. வி. சுப்பிரமணியத்தின் பண்ணிசைக் கச்சேரி, சனிக்கிழமை மாலை யாழ், ட்ரிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது [கு]

## விரிவுரை

[யாழ்ப்பாணம்]

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தின் ஆராய்ச்சி விரிவுரை யாழ் பாரதி பாஷிய வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பலாலி ஆசிரிய கலாசாலை பேராசிரியர் பண்டிதர் க. சச்சிதானந்தம் ஆராய்ச்சி விரிவுரையாற்றுவார், [கு]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: 11974

தி. அ. இராசையாபிள்ளை கைம்பெண் எலிசபேத் முத்தம்மா, கரம்பன், ஊர்காவற்றுறை.
— வழக்காளி

எதிராக

ஆறுமுகம் கதிரவேலு புளியங்கூடல்,
சரவணை, ஊர்காவற்றுறை
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்ரிக் கோட்டின் MB. 11974-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1979-ம் ஆடி 7 மீ 18 உ (18-7-79) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3812/-ம் 27-8-70 தொடக்கம் 3-8-72 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 572-66.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று ''இந்தனும் உப்பன'' நில பர. 10 எல்லை கிழக்கு கதிரவேலு பெண் விசாலாட்சியினதும். வடக்கு நாகலிங்கம் சோமசுந்தரத்தின் ஆதனம் மேற்கு வீரகத்தி வேலுப்பிள்ளைபெண் அன்னம்மாவின் ஆதனம். தெற்கு பொன்னையாவின் ஆதனம், தெற்கு பொன்னையா கந்தையாவின் ஆதனம் இதடங்கலும்.

இ. கனகரெத்தினம்,
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

10, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 2539

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோர்ட்டில்

ஈடு 13001

இல: 41, கண்டி ரோட், யாழ்ப்பாணம்.
வெற்றிவேலு ஜெயநாதன் பெண் சத்தியபாமா அல்லது துரைசிங்கம் தற்பொழுது விவாகம் ரத்தாகி சத்தியபாமா துரைசிங்கமென அறியப்படும். - வாதி

1. நாகலிங்கம் கந்தசாமி,
2. பெண் வடிவாம்பிகை கந்தசாமி. — பதில்வாதி

எதிராக

பாரிஷல் வீதி, யாழ்ப்பாணம்
பிலிப் பிருன்சீஸ் சேவியர், தற்பொழுது
இல: 680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
— பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/ 13001-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி (30-5-1979) புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும், 10-30 இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

வட்டி ரூபாய் 27,670/-ம் மேலும் ரூபாய் 23,600/-க்கு 29-2-72 தொடக்கம் 23-11-72 வரைக்கும் 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 1320-42. இதில் ரூபாய் 18,000/- கொடுபட்டுள்ளது.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்வண்ணார்பண்ணை கோவில்பற்று உவையடி 17.07 குளிகள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் பிரிவிடுதல் P.1033ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் உத்தரவுபெற்ற உலாந்தா T.கந்தையா அவர்களின் 9-6-69-ந் திகதி தயாரிக்கப்பட்ட 304 A இலக்கம் கொண்ட உலாந்தாப் படத்தில் 3-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லைகிழக்கு மேற்குறித்த உலாந்தாப் படத்தில் 2-ம் துண்டாகக்காட்டப்பட்டுள்ள காணி, வடக்கு உலாந்தாப்படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணி மேற்கு மணிக்கூட்டு ரோட்டு, தெற்கு இவ்வுலாந்தாப் படத்தில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளகாணி, பதிவு இலக்கம்: D. 365/105.

2. மேற்படியூர் வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை மேற்குறித்த உலாந்தாப் படத்தில் 8-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணி, 'உவையடி' நில பரப்பு 2குளி 6.03அதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு குறித்த உலாந்தாப் படத்தில் 9-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணி, வடக்கு A V நடராஜாவுக்கும் பாரியாருக்கும் மற்றவைக்குமுரிய ஆதனங்கள் மேற்கு உலாந்தாப் படத்தில் 7-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணி, தெற்கு ஒழுங்கையும் குறித்த உலாந்தாப் படத்தில் 10-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணியும் பதிவு இலக்கம் D 365/110.

நா. ஸ்ரீரங்கநாதன்,
விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

6, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
2-4-79

25[illegible]

## இளைஞர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிசார் விசாரணை நடாத்தி திரு. பாஸ்கரனை கைது செய்தனர்.

பிரேத பரிசோதனை நடாத்திய சட்ட வைத்திய அதிகாரி திருவுடையான், ஆயுதங்களால் பலமாகத் தாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ப. நோ. கூ. ச. பெற்றோல் விற்பனை நிலைய முகாமையாளர் திரு. கந்தசாமி சாட்சியமளிக்கையில், சம்பவ தினம் மாலை கொலையுண்டவருடன் பத்து இளைஞர்கள் கருத்துமோதலில் ஈடுபட்டு சிறிய சச்சரவு ஏற்பட்டு பின்னர் சமாதானமாக கலைந்து சென்றதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து பத்து இளைஞர்களையும் கைது செய்த பொலிசார் விசாரணைக்காக தடுத்து வைத்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
புலோலி தெற்கு-புலோலி

## அறிவித்தல்

### மாவட்டநீதிமன்றம் பருத்தித்துறை

இல: TR. 107

நீலக்குட்டி கதிர்காமதம்பி
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
முகாமையாளர் அல்லப் பெற்றுனை, சுப்பிரமணிய சுவாமிகோவில்.

(மனுதாரர்)

மனுதாரர், அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அல்லப் பெற்றுனை சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆதனத்தை அதில் குடியிருப்போருக்கு விற்று கோயில் திருப்பணி வேலைகளையும் கோயில்நலனுக்கும் பாவிப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

இவ் அனுமதியை வழங்குவதற்கு தடை இருப்பின் 1979ம் ஆண்டு ஆனி மீ 29ம் திகதிக்கு முன் அத்தகைய ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தவறின் அனுமதி வழங்கப்படும்.

### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை 'கன்னியந்திடல்' நில பர 67½ இதில் நில. பர. 17குளி 12½ம். கட்டைவேலிக் கோயிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியிறை புளியடிக்கலட்டி நில. பர. 12 7/8 உத்தமன் கலட்டி நில. பர. 15 இராக்கன் புளியடி நில. பர. 39 3/8 (இது பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்ட 3292ம் இலக்க படத்தின்படி நில. பர 39 குளி 1 14/32) இராக்கன் புளியடி நில. பர. 40 7/8 சேர்ந்த காணிக்கு ஏறக்குறைய நில. பர. 126 இதில் கழித்தநிலம் நீக்கி மிகுதி நில. பர. 69குளி 19/32 இதில் வடக்குப்புறமாக நில. பர. (18) பதினெட்டு எல்லை கிழக்கு சிவகுரு கைம்பெண் பொன்னம்மாவுக்குரியாதனம் வடக்கும் மேற்கும் சேனாதிராசசேகரம் ஏகாம்பரநாதனுக்கும் மறுபேருக்குமுரியாதனம் தெற்கு இவ்வாதனத்தின் மிகுதிப்பாகம் இவ் வெல்லைக்குட்பட்டவை முழுவதும் இது 1978ம்ஆண்டுபுரட்டாதி மீ 16ம் திகதி நில அளவையாளர் க. கிருஷ்ணபிள்ளையால் 112ம் இலக்க படத்தில் விந்தாரிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி

ஒப்பம்
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை

1979ம் ஆண்டு வைகாசி
மீ 15ம் திகதி.

2512

# மத்யூவின் வகுப்புவாத பேச்சுப்பற்றி 'இந்து' ஆசிரிய தலையங்கம் எழுதியது

## புலித்தடை சட்டவிவாதத்தில் 'அமிர்'

[கொழும்பு]

"வன்முறைக்கு நாம் எப்போதுமே விரோதிகள்; இதை நாம் பலமுறை இங்கு கூறி விட்டோம். எம்முடைய உரிமைகளுக்காக சட்டமறுப்பு போன்ற சாத்வீக வழிகளிலேயே நடவடிக்கைகளை எடுத்தோம்; இனியும் எடுப்போம். இந்த 'வியாதி' திராதவரை அடிமைநிலையை ஏற்று வாழும்படி யார் கூறினாலும் நாம் ஏற்கமாட்டோம். உரிமை மறுக்கப்படும் எவருக்கும் உரிமைக்கு கிளர்ச்சிசெய்ய உரிமை உண்டு. இங்கு இந்தச் சபையில் அமைச்சர் ஒருவரின் தரக்குறைவான பேச்சு பற்றி சென்னை 'இந்து' பத்திரிகை ஆசிரியத் தலையங்கம் கூட எழுதியது; இதைவிட அவமானம் வேறு என்னவேண்டும்? இந்த சபையிலுஞ்சரி, நாட்டிலுஞ் சரி நாம் சிறுபான்மையினரே ஆனால் தனியொருவனாக நிற்கும் நிலை ஏற்படினும் எமது உரிமைகளுக்காக நாம் வாதாடியே தீருவோம். அதற்காக நாம் தாக்கப்பட்டாலும் கூட பரவாயில்லை. நாம் ஓர் இலட்சியத்துக்காக இங்கு வந்திருக்கிறோம்"

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், 'தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடை விதிக்கும் சட்டத்தை' மேலும் ஓராண்டுக்கு நீடிப்பது தொடர்பான சட்டமூலத்தின் மீதான விவாதம் கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது அச்சட்டமூலத்தை எதிர்த்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

### வெளிநாட்டுப் பத்திரிகை

விவாதத்தில், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவைத் தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் உரையாற்றினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது;

"சில வெளிநாட்டுப் பத்திரிகைகளை காலத்துக்குக் காலம் இச்சபையில் கையாளுவது வழக்கம். சென்னை இந்து பத்திரிகை எழுதிய சில ஆசிரியத் தலையங்கங்கள் பற்றி பல தடவைகளில் இச்சபையில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. மூன்று வாரங்களின் முன்னர் கூட பிரஸ்தாபிக்கப்பட்டது: என்னைக் கண்டித்து எழுதப்பட்ட தலையங்கத்தை கௌரவ கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் பெருமையோடு இச்சபையில் வாசித்தார். அதே பத்திரிகை ஏப்ரல் 30ம் தேதி ஆசிரியத் தலையங்கத்தில் அவரைப் பற்றி என்ன எழுதியிருக்கிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்

"இந்நாட்டு அரசியலில் வியாதி'களை ஏற்படுத்தும் சில சக்திகள் இருக்கின்றன அவற்றில், சிறில் மத்யூ போன்ற சக்திகளை அரசியல் காரணங்களுக்காக வெளியே வீசிவிட முடியாவிடினும், வாயை மூடவாவது செய்ய வேண்டும். இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சர் சிறில் மத்யூ வகுப்புவாத பிரச்சாரத்தை - தூஷணமான பேச்சை பாராளுமன்றத்திலே பேசினார்"

என்று சந்தர்ப்பத்தைக் கைப்பற்றிக்கொள்ளுங்கள்.

என்ற தலைப்பின் கீழ் தம்மைப் பற்றி அப் பத்திரிகை எழுதியிருப்பதையும் அமைச்சர் படிப்பார் என்று கருதுகிறேன்.

### ஹிட்லரின் பிரசாரம்

"உலகில் எங்குமே சிறுபான்மை இனங்கள் பயப்படுவது சகஜம்; தாம் தாக்கப்படுவதாக பீதிகொள்வது வழக்கம். ஹிட்லரின் ஆட்சியில்

## -- மாலி --

சிறுபான்மை யூத மக்களுக்கு எதிராக ஜெர்மனியரிடம் எத்தகைய பிரசாரத்தை ஹிட்லர் மேற்கொண்டார்? அவர் செய்த பிரசாரத்தால் ஐரோப்பா முழுவதும் 60 லட்சம் யூத மக்கள் எப்படி அந்த இனவெறிக்குப் பலியானார்கள் என்பதை வரலாறு நமக்குக் கூறுகிறது

"ஒரு சிறுபான்மை இனத்தைத் தூண்டுவதன் மூலம் எதனையுமே செய்துவிட முடியாது ஆனால் பெரும்பான்மை இனத்தை இவ்விதத்தில் தூண்டுவது மிகவும் ஆபத்தானது சிறுபான்மை யூதரின் அநுதாபத்துக்காகப் பேசுவதுபோல் பேசிப்பேசி, ஹிட்லர் எப்படி ஜெர்மனியரின் ஆதரவைப் பெற்றார் என்பதை நாம் அறிவோம்.

"நாம் பாதிக்கப்படும் மக்கள். ஆனால் இனவெறியைக் கிளப்பி எம்மை ஒடுக்க கொண்டுவரப்படும் சட்டம் முழுமக்களையும் அடக்கப்பயன்படும் என்பதை ஹிட்லர், முசோலினி போன்றோர் எப்படி நாடுகளைக் கைப்பற்றினர் என்பதிலிருந்து அறியமுடியும்.

அதனாலேயே இச்சட்டத்தை நாம் எதிர்க்கிறோம். இது 'புலி'களை மாத்திரம் தடை செய்யும் சட்டமல்ல; 'வேறு இயக்கங்களையும்' என்பது வரையறுக்கப்படாத எந்த இயக்கத்தையும் குறிக்கும்.

### புலிகள் இருந்தால்

'புலிகள்' இருக்கின்றனவோ இல்லையோ எமக்குத் தெரியாது 'புலிகள்' தான் உன் செயல்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றன என்றால் அவற்றைக் கண்டுபிடித்து தண்டிப்பது அரசின் கடமை. கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் எப்படிக் கூறினாலும், காந்திய வழியில் எமது உரிமைகளுக்காக கிளர்ச்சி செய்யும் இயக்கமே கூட்டணி என்பதை எவருமே ஏற்றுக் கொள்வர்.

கூறுவதனால் பெரும்பான்மை இனமக்கள் அவற்றை நம்பி, வெறிகொள்வர் என அமைச்சர் எண்ணுகிறார் இவை அமைதியை விரும்பி அல்ல. வேறு நோக்கங்களுடனேயே பேசப்படுகின்றன என்பது தெளிவு.

வல்வெட்டித்துறையில் பாக்கியநாதன் என்ற வேட்பாளரின் காருக்கு சுடப்பட்டதாக அமைச்சர் இங்கு கூறினார். என்னிடம் இங்கு வேட்பாளர்களின் பட்டியல் வெளியான அரசாங்க வர்த்தமானியே இருக்கிறது. பாக்கியநாதன் என்று ஒரு வேட்பாளர் அங்கு போட்டியிட்டதாக எனக்கும் தெரியாது! இந்த வர்த்தமானியில்கூட அப்படி ஒரு பெயர் இல்லை. பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சர் இச் சபையில் இப்படிக் கூறலாமா?

கூட்டணி எம். பி. க்கள்; வெட்கம், வெட்கம்!

திரு. அமிர்தலிங்கம்: ஐ தே க பட்டியலில் முதலாவது நியமனத்தைப் பெற்றிருந்த திரு. பிரேமச்சந்திரன் என்பவர், 'அமைச்சர் மத்யூதுவின் பேச்சுக்களினிமித்தமாகவே தான் நான் ஐ தே க விலிருந்து விலகினேன்' என பகிரங்கமாகவே பேசியது அமைச்சருக்குத் தெரியுமா?

திரு. தர்மலிங்கம்: ஏன் தெரியாது!

திரு. அமிர்தலிங்கம்; தனது கட்சிக்கு எவ்வித 'சேவையை' அமைச்சர் செய்கிறார் என்பதை நாம் பாராட்டுகிறோம்.

பெறவில்லை பௌத்த மதத்தை மதிப்பவர்கள் நாம். முன்னொரு காலத்தில் தமிழர் பௌத்தர்களாகவே இருந்திருக்கின்றனர். மணிமேகலை, குண்டலகேசி என்ற தமிழ்க் காப்பியங்கள் பௌத்தத்தின் பெருமையைச் சாற்றுவனவே. புத்தரின் போதனைகளை போற்றுகிறோம் நாம் அப்படியிருக்க, அமைச்சர் கூறுவது விஷமத்தனமானது: ஆதாரமற்றது அவர் இப்படியெல்லாம் பேசுவதால் சிங்கள மக்களைத் தூண்டுதற்கு அவை பயன்படுமே தவிர வேறுபயன் இவற்றால் ஏற்படாது.

1958 இனக்கலவரத்தின் போது 19 இந்துக் கோவில்கள் தான் தகர்க்கப்பட்டன. அவற்றுக்கு ஆதாரம் உண்டு. அமைச்சர் இனிமேலாவது இப்படிப் பேசாதிருப்பாரென்று நான் நம்புகிறேன்.

### யாழ்.வளாக மாணவன்

யாழ். வளாக மாணவன் மாரசிங்க விவகாரம் பற்றி எத்தனையோ தடவைகள் இச் சபையிலேயே கூறப்பட்டு விட்டது. தாம் எப்படி நடத்தப் பட்டோம் என்பதை யாழ் வளாகப் பேராசிரியர், மாணவர் சன்சோனிக் கமிஷன் முன்பே தெரிவித்திருக்கிறார்கள்.

'யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டை செல்லும் பஸ் ஒன்றில் பிரயாணி ஒருவர் வேலைக்காரச் சிறுவனுடன் அமர்ந்திருந்தார். அப்போது பஸ்ஸில் ஏறிய சில சிங்கள மாணவர் அவ்வேலைக்காரச் சிறுவனை எழுப்பிவிட்டு தம்மில் ஒருவருக்கு இடமளிக்குமாறு கேட்டனர் அவனும் பணம் கொடுத்தே பிரயாணம் செய்வதாகவும் அவன் எழும்பவேண்டியதில்லை என்றும் அப்பிரயாணி கூறினார். வட்டு. சந்தியில் அவர்கள் இறங்கியபோது அப்பிரயா

## "புலிகள்' இருந்தால் கண்டுபிடித்து தண்டிப்பது அரசின் கடமை!"

இங்கு, பொறுப்புவாய்ந்த ஓர் அமைச்சர் பொறுப்பற்ற விதத்தில் பலவிடயங்களைக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் சிங்களமக்கள் வாழமுடியாதநிலை இருப்பதாக அவர் கூறினார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வயனல் பெர்னாண்டோவின் அழைப்பின்மீது வடபகுதிக்கு விஜயம்செய்த இந்நாட்டின் அத்தனை பத்திரிகைகளினதும் நிருபர்கள், அங்கு நிலைமைகளை நன்றாக அவதானித்த பின்னர் எந்தப் பயங்கரமும் வடபகுதியில் இல்லை என்பதை அத்தனைபேரும் தமது பத்திரிகைகளில் தங்களது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்கள். 'புலி'களைப் பிடிப்பதற்குப் பொறுப்பான பிரிகேடியர் ரணதுங்க அங்குநடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கும், கூட்டணிக்கும் தொடர்பு இல்லை என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறார். நிலைமை அப்படியிருக்க, உண்மையற்றவற்றை மீண்டும் மீண்டும் இச்சபையில் அமைச்சர் கூறுவதன் காரணம் என்ன? ஹிட்லரின் பிரசாரப் பீரங்கியாகவிருந்த கொபல்ஸ் என்பவரும் இதையேதான் கையாண்டார். எந்தப் பொய்யையும் திரும்பத்திரும்பக் கூறுவதால் மக்கள் அவற்றை நம்பிவிடுவர் என்ற அடிப்படையில் அவர் அம்முறையைக் கையாண்டார். அப்படியேதான், கௌரவ கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரும் இச்சபையில் முயல்கிறார் என்பதை நான்மிகுந்த வேதனையுடன் இங்கு கூறிக் கொள்கிறேன்.

### அமைச்சர்களின் நோக்கம் என்ன?

'பொறுப்பு வாய்ந்த அமைச்சர், பலதடவைகள் இச்சபையில் மறுக்கப்பட்டவற்றையே மீண்டும் மீண்டும் நல்ல சேவையே செய்கிறார் அவர்!

### ஐ. தே. க. பட்டியல்

"ஐ தே க பட்டியலில் நியமிக்கப்பட்ட 15 பேரில் எங்கள் மூவரையும் தவிர மற்றைய 12 பேரும் யார்? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்பதே எமக்குத் தெரியாது' என்று ஐ தே க பட்டியலில் நியமிக்கப்பட்ட மூவர் ஒப்பமிட்டு, சமாதான நீதவான் ஒருவர்முன் சத்தியக்கடதாசி மூலமே தெரிவித்திருக்கின்றனர், அவர்களைத் தெரியாத நிலையிலேதான் பட்டியலிலும் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்!

திரு. கணேசலிங்கம் வீட்டு சம்பவ விபரம் எனக்குத் தெரியாது. ஆனால், அங்கு சுட்டது பொலிஸ்; காயப்பட்டவர் ஐ தே க ஆதரவாளர் என்றே நான் அறிகிறேன்.

திரு. சந்திரசேகரத்தால் திரு. கணேசலிங்கத்துக்கு பாதுகாப்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞரே பொலிசாரால் சுடப்பட்டு முதலில் மந்திகை ஆஸ்பத்திரியிலும், பின்னர் யாழ் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டார் என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் இச் சபையில் கூறுகிறேன்

"ஐ தே க வேட்பாளர் தமது கார்களில் கட்சிக் கொடிகளுடன் செல்லவில்லையா? அப்படிச் செல்ல முடியாமலிருந்ததா என்பதை கௌரவ போக்கு வரத்து அமைச்சரைக் கேட்டால் தெரிந்து கொள்ளலாம்.

### பௌத்தத்தின் பெருமை

வடக்கில் பௌத்த வழிபாட்டு நிலையங்களை அழிப்பதாக அமைச்சர் கூறுவது மிக ஆபத்தான சொல்லாகும். எங்கும் அப்படி எதுவுமே நடை

ணியை இம்மாணவர்கள் தாக்கினர். அதனால் மறுநாள் அப்பிரயாணியின் ஆதரவாளர் சிலருக்கும் இம்மாணவருக்கும் சந்தியில்கைகலப்பு மூண்டது. மாணவர் தரப்பில்அசிட், சைக்கிள் செயின் போன்றனபாவிக்கப்பட்டன மறுதரப்பிலும் கத்தி பாவிக்கப்பட்டிருக்கிறது பலர் அதில் காயமடைந்தனர் மாரசிங்காவின் குடல் வெளி வந்ததாகவோ, அதைப் பிடித்து உள்ளே தள்ளியபடி அவர் ஓடினரென்றோ நான் அறியவில்லை! ஆனால் முதுகில் தான் அவர் குத்தப்பட்டு அவரது முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டதால் இடுப்புக்குக் கீழே உணர்ச்சியற்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவே நான் அறிகிறேன் அமைச்சர் கூறுவது சிங்கள மாணவருக்கு எதிராக தூண்டப்பட்ட பிரசாரமே

பயங்கரவாதம் என்ற போர்வையில் தனி மனித 'உரிமைகளைமறுத்து நீண்டகால விசாரணையின்றி அடைத்து வைக்க வழிவகுக்கும் என்ற காரணத்தால் இச்சட்ட மூலத்தை நாம் எதிர்க்கிறோம். (ம)

## மக்கள் கருத்து

### வானொலிக் குறை தீருமா?

யாழ்ப்பாணத்திலிருந்து கலைஞர்கள் வானொலிநிகழ்ச்சிகளை ஒலிப்பதிவுசெய்ய கொழும்புக்கு 240 மைல் பயணம் செய்வதில் இருக்கும் கஷ்டங்களை எடுத்துக்காட்டியாழ்ப்பாணத்தில் உடனடியாக ஒரு வானொலி நிலையமோ அல்லது ஒலிப்பதிவு வசதியோ செய்து தருமாறு ஒலிபரப்பு மந்திரிக்கு விண்ணப்பம் செய்திருந்தோம். அதன் பயனாக மந்திரியின் காரியதரிசியைப் பேட்டி கண்டபோது அவர் ஆறுமாத காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு பிராந்திய வானொலி நிலையம் கட்டித்தருவதாக வாக்குறுதியளித்தார்.

கலைஞர்களைத் தரம்பிரிப்பதில் இருக்கும் குறைகளைத் தீர்ப்பதற்குத் தென்னிந்தியாவிலிருந்து ஒரு கர்நாடக இசைவிற்பன்னரை அழைக்கஒழுங்கு செய்வதாகவும் கூறினர்.

தமிழ்ப்பகுதி நிர்வாகம் முதலியவைகளை விசாரிக்கஒரு விசாரணைச்சபை நியமிக்குமாறும் கேட்டுக் கொண்டோம். அக்கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாகக் கூறினர்.

பல சிறந்த கலைஞர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் இப்போது பங்கு பற்றுவதில்லை. இதனால் சினிமாப்பாட்டுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பக்திப் பாடல்கள் கூட சினிமாப் பாடல்களாக இருக்கின்றன. ஆதின வித்வான்களுடைய பண்முறைகளோ சாஸ்திரிய கர்நாடக சங்கீதமோ அதிகம் ஒலிபரப்பப்படுவதில்லை.

ச. ஸ்ரீநிவாசன்,

காரியதரிசி,
வானொலிக்கலைஞர்,
ரசிகர் சங்கம்.

## திருப்பணி வேலைகள்

[சரவணை]

சரவணை தேவபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் மூலஸ்தான கோபுரத் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது. ஆலய பரிபாலன சபையினர் இதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளனர் ......

## தேர்த்திருவிழா

[சரவணை]

புளியங்கூடல் இந்தன் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது மறுதினம் தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

# ஆசியசமாதானம்: வாஜ்பாயி கருத்து

(புதுடில்லி)

"ரஷ்யாவுடன் இந்தியா நட்புறவையும் ஒத்துழைப்பினையும் பேணுவதன் மூலமே ஆசியாவில் சமாதானத்தை உத்தரவாதப்படுத்த முடியும்" என்று இந்திய பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் வெளிநாட்டமைச்சர் ஏ. பி. வாஜ்பாயி கூறினார்.

"சோதனைமிக்க கால கட்டங்களில் இந்தியாவுக்கு ஆதரவு வழங்கிய நாடுகளில் சோவியத் யூனியன் முதலான சோஷலிஸ நாடுகளே. இந்திய சோவியத் உறவுகள் தற்போதுள்ளதுமில்லர் தவாறு வளர்ந்து வலுப்பட்டுள்ளன' என்று கூறிய அவர்,

'ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் மது-லிமாயே ஒரு டெல்லித் தினசரிக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் "சீனாவின் பிராந்திய விஸ்தரிப்பு நடவடிக்கைகளை விட்டு இந்தியா விழிப்பாக இருக்க வேண்டும்' என்று எச்சரித்துள்ளார்.

"1962-ல் கைப்பற்றப்பட்ட இந்தியப் பிரதேசங்களிலிருந்து சீனத் துருப்புகள் வெளியேறாத பட்சத்தில், சீனாவுடனான உறவுகளை சுமுகப்படுத்துவது பற்றி ஆராய முடியாது. தென்கிழக்காசியாவில் பீகிங் பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கையினைப் பின்பற்றி வருகின்றது. வியட்நாம், கம்பூச்சியா, லாவோஸ் ஆகிய இளம் நாடுகளுக்கு எதிராக சூழ்ச்சிகளில் இறங்கியுள்ள பீகிங், இந் நாடுகள் மத்தியில் பூசல்களை உருவாக்கவும் முயலுகிறது' என மது லிமாயே தமது பேட்டியின் போது வலியுறுத்திக் கூறியதை வெளிநாட்டமைச்சர் வாஜ்பாயி சுட்டிக் காட்டியிருந்தார்.

# சேக்கிழார் விழா

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எதிர்வரும் 30-ம் திகதி சேக்கிழார் குரு பூஜையையும் அதைத் தொடர்ந்து இரு நாட்கள் சேக்கிழார் விழாவையும் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதிவரை கொடித்தினத்தையும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

இவ்விழாவில் தென்னிந்தியப் பேராசிரியர் ஒருவரும் கலந்து கொள்வார்.

தேவார வகுப்புக்களையும், பெரியபுராண வகுப்புகள் போன்ற பயன்தரும் சேவைகளையும் ஆற்றிவரும் இம் மன்றத்தின் கொடித்தினத்தை சகல சமயத்தவர்களும் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (கா-சி)

# இந்து கலாச்சாரப்பிரிவு நடவடிக்கை

[கொழும்பு]

இந்துசமயம், இந்து கலாசாரம் சம்பந்தமாக ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்வதற்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமய, இந்து கலாசாரப்பிரிவு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

பணிகளைமேற்கொள்வதற்கு ஆலோசனை பெறும் நோக்குடன் இலங்கையில் செயல்பட்டுவரும் இந்துசமய சபைகள், சங்கங்கள், சைவ ஸ்தாபனங்கள், இளைஞர் மகளிர் மன்றங்கள், இந்துகலாசார நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் விபரங்களையும், நிறுவனத்தைப்பற்றிய விபரங்களையும் அமைச்சின் செயலாளர் சேகரித்து வருகிறார். [கு]

## பாவற்குளத்தில் தப்லீஹ் இஜ்திமா

[வவனியா]

எதிர்வரும் சனி, ஞாயிறு நாட்களில் வவனியாவைச் சேர்ந்த பாவற்குளத்தில் இஜ்திமா நடைபெறும். பல உலமாப் பெருமக்கள், பெரியார்களின் மார்க்கச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மக்களுக்காக உணவு, தங்குமிடவசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## கல்வி அமைச்சு உதவி நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

சர்வதேச சிறுவர் ஆண்டாக இவ்வருடம் பிரகடனப்படுத்தப்பட்டதையொட்டி நாட்டிலுள்ள கல்வி வட்டாரங்கள் தோறும் இரு பின்தங்கிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து, அப்பாடசாலைகளுக்குப் பாடப் புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பிரிவில் உள்ள அளவெட்டி தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், காங்கேசன் துறையிலுள்ள சிங்கள கனிஷ்ட பாடசாலைக்கும் இலவச பாடப் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றை கல்வி அமைச்சு இவ்வாரம் வழங்கியுள்ளது.

## யாழ். நகரில் காசி

[யாழ்ப்பாணம்]

எட்டுமாத சிறைவாசத்தின் பின்னர் அண்மையில்பிணையில் விடுதலையான உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

அரசுக்கு எதிராக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு எட்டு மாதங்களின்பின் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்ட திரு. காசி ஆனந்தன் இயக்கஅலுவல்காரணமாகவே நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர் வெள்ளிக்கிழமை மட்டுநகர் செல்வாரென்றுஎதிர்பார்க்கப்படுகிறது. [கா]

## உற்சவம்

[வண்ணார்பண்ணை]

சரவணை - நாரந்தனை கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 30 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்களும், உற்சவ கால நிகழ்ச்சிகளில் செந்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் கதாப்பிரசங்க நிகழ்ச்சி இடம் பெறும்.

# இன்றைய பலன்

வைகாசிமாதம் 10-ம் திகதி

வியாழக்கிழமை

(24-5-1979)

**மேடம்:** துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். துணைவரின் உடல் நலம் கெடும், பணமும் பெருமளவில் செலவாகும்.

**இடபம்:** வாழ்க்கை இன்று தேனாக இனிக்கும். அரசினர் விருதும் சிலருக்குக் கிடைக்கலாம், புதிய துறையின்மூலம் பொருளைத் தேடுவீர்கள்.

**மிதுனம்:** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், தாய்வழி ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், வாகன நலனுக்கும் இடமுண்டு.

**கடகம்:** கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, அறிஞர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

**சிங்கம்:** கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும், இலட்சியப் போக்குடன் காரியமாற்றுவீர்கள், இனசனக் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

**கன்னி:** மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், அமைதியே விரும்பத்தக்கது.

**துலாம்:** கருத்தொருமித்த காதலர்கள் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் இடம் பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும், கண்ணியம் சேரும், கௌரவம் உயரும்.

**விருச்சிகம்:** நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவார்கள், தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

**தனுசு:** தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும், மூத்தோர்கள் உதவிக்கும் இடமுண்டு, தெய்வ வழிபாட்டில் சிலருக்கு ஆர்வம் பிறக்கும்.

**மகரம்:** வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள், தொழிலில் புதிய உற்சாகம் பிறக்கும், சுபதினம்.

**கும்பம்:** செலவிற்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், விருந்து உபசாரங்களில் அதிக உற்சாகம் பிறக்கும், சிறப்பான தினம்.

**மீனம்:** கடன் தொல்லைகள் அதிகரிக்கும், தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனஞ் செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை



அரஸ்கோ ஸ்தாபன அதிபர் சிவக்கருவூலர் திரு. இ. அரசரத்தினம் நல்லூர் தெற்கு சனசமூகநிலைய 30வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு அவர்களின் புதிய கட்டிடத்தை மங்களவிளக்கேற்றித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

# ஓய்வுபெறும் ஒரு நல்லாசிரியன்

'எம். சி. எஸ்ப்' என்று செல்லமாக அழைக்கப்படும் திரு. மனுவேற்பிள்ளை சிறில் பிரான்சிஸ் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து ஓய்வுபெறுகிறார். மேற்படி கல்லூரி ஆசிரியர் கழகம் அவருக்கு இன்று பிரியாவிடை இராப்போசன விருந்தளித்துக் கௌரவிக்கிறது.

இவர் மொத்தம் 29 வருடங்கள் ஆசிரியசேவை புரிந்துள்ளார். இவற்றுள் 10 வருடங்களை பரியோவான் கல்லூரியிலும் மீதி 19 வருடங்களை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் திறம்பட பணியாற்றியுள்ளார்.

க. செல்வரெத்தினம்

[செயலாளர்-யாழ். இந்து]

இவருடைய சேவையுணர்வு பாராட்டுக்குரியது. முக்கியமாக தமிழ்மொழிமூலம்இடைநிலைவகுப்புக்களுக்குவிஞ்ஞான நூல்களை இயற்றி பலரது பாராட்டையும் நன்றியையும் பெற்றுள்ளார். இவருடைய தமிழ்ப்பற்று மேம்பட்டது. விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்தாலும் இவருடைய ஆங்கில இலக்கிய அறிவும் தமிழ் நாடகத்தில் இவர் கொண்டுள்ள ஈடுபாடும் வியக்கத்தக்கன. இவர் மாணவர்களுடைய ஆக்கத்திறன்களை ஊக்குவிப்பதற்கு அவர்களைக் கொண்டே மேடையேற்றிய நாடகங்களும், நடாத்திய பொருட்காட்சிகளும், கலை விழாக்களும், வெளியிட்ட கலை மலர்களும் நற்சான்றுகளாகும்.

இவருடைய ஆலோசனையுடன் இயங்கிவரும் தபாற் புத்தக சேவை மூலம் 20க்கு மேற்பட்ட ஆசிரியர்களை பாட நூலாசிரியர்களாக உருவாக்கியுள்ளார். பரீட்சைகள் நடாத்துவதற்கு வசதியற்ற பாடசாலைகளுக்கு உதவக்கூடிய வகையில் வினாத்தாள்கள் தயாரித்து அச்சிட்டு உதவியிருக்கிறார். இவருடைய விசேட பாடங்கள் விலங்கியலும் தாவரவியலுமாகும். இவற்றில் புலமைபெற்று பல்கலைக் கழகம் புகுந்த பல மாணவர்கள் பலர் இவரை இன்றும் நினைவில் வைத்துப் போற்றுகிறார்கள். பல வறிய மாணவர்களுக்கு யாருமறியாமலே பல வகைகளிலும் உதவி செய்திருக்கிறார். இவர் வருவது போவது கூடத்தெரியாது. அடக்கமானவர். அமைதியானவர். ஆடம்பரப்பிரியருமல்லர். எதிலும் திட்டவட்டமான தெளிவும் பரந்துபட்ட அறிவும், ஆராய்ந்து செய்து கொண்ட முடிவுகளையும் உடையவர். அதட்டலின்றி அன்பினாலேயே மாணவருள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்.

ஓய்வுபெற்றாலும் அவருடையமுதற்காதலாகிய கல்வித் துறைக்கு தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டேயிருப்பார் என்றே கல்வியுலகு எதிர்பார்க்கிறது. அவருக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் எல்லாம் வல்ல இறைவன் வழங்குவானாக.

## புனித அந்தோனியார் ஆலய உற்சவம்

[சரவணை]

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 1 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 13 ம் திகதி சுற்றுப்பிரகாரமும் அதற்கு முதல் நாள் மாலை ஆயத் தினம், நற்கருணை பலி பூசை என்பன நடைபெறும்.

ஏழாலை வடக்கில்

## மின்னொளியில் இன்றைய கரபந்தாட்டம்

(தெல்லிப்பழை)

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூக நிலையத்தின் கலாநிதி விளையாட்டுக் கழகத்தால் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுமோதும் கழகங்கள்:

6 வீரர் போட்டியில் சிறுப்பிட்டி அண்ணா வி. க. வுடன் புத்தூர் மேற்கு உதயசூரியன் வி க. மோதுகின்றது. இதில் வெற்றி பெறும் கழகத்துடன் சிறுப்பிட்டி மக்கள் வி. க. போட்டியிடும்.

மயிலிட்டி இளங்கோ வி. க. வுடன் இடைக்காடு ச. ச. நிலையம்மோதும்.

4 வீரர் ஆட்டத்தில் சிறுப்பிட்டி மக்கள் வி. க. வை எதிர்த்து வண்ணார்பண்ணை வள்ளுவர் வி. க. வும், நீர்வேலி சிறீ விநாயகர் வி. க. வை எதிர்த்து திருநெல்வேலி சிவன் வி. க. போட்டியிடும். [ச]

# "கூட்டணியும் 'புலி'களும் ஒன்றே"

## அமைச்சர் மத்தியூ குற்றச்சாட்டு

(கொழும்பு)

"பயங்கர, இனவாத இயக்கங்கள் வடக்கில் வாழும் பொதுமக்களைப் பயமுறுத்தி, வங்கிகளைக் கொள்ளையடித்து, சாதாரண மக்கள் அமைதியுடன் வாழ முடியாத நிலையை அங்கு ஏற்படுத்தி வருகின்றன"- என்று கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ, புலி இயக்க தடை சட்டத்தின் திருத்த மசோதாமீது பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையைத் தொடர்ந்து இவ்விவாதத்தில் அமைச்சர் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:-

'புலி' என்று ஒன்று இருப்பதாகத் தமக்கு தெரியாது என்றார் கோப்பாய் உறுப்பினர். கண்ணாடிக்கு முன் நின்று அவர் பார்த்தால் புலி எது? அது எங்கு இருக்கிறது என்பது அவருக்கு அப்போது புரியும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் புலிகளை வழி நடத்துபவர்கள் என்பது எல்லோருக்குமே தெரியும். இவர்கள் அத்தனை பேரும் கொள்ளையடிக்கப்படும் பணங்களிலேயே தமது வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது 'புலி' யைத் தெளிவாகத் தெரிந்தது. புலிகளும், கூட்டணியும் ஒன்றே என்பது புரிந்தது.

### காருக்கு சுட்டனர்

வல்வெட்டித்துறையில் பாக்கியநாதன் என்ற ஐ. தே. க. பிரதம வேட்பாளரின் காருக்கு ஏப்ரல் 22 ந் தேதி பட்டப்பகலில் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

மே 17 ந் தேதி பருத்தித்துறையில் கடைசிக் கூட்டத்தில் அமைச்சர்கள் பெஸ்ரஸ் பெரேரா, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் பேசினார்கள். இரவு 11 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது. இரவு 12-30 மணியளவில் பிரதம வேட்பாளரின் வீட்டுக்கு வெடி வைத்தனர்.

யார் இவற்றைச் செய்கிறார்கள்?

### அமைப்பாளர் வீட்டில் வெடி

மே 15 ந் தேதி காலை 8 மணிக்கு 8 பேர் ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கணேசலிங்கம் வீட்டுக்குச் சென்று வெடி வைத்தனர். அங்கு நின்ற வாகனங்களின் 'டயர்'களை வெட்டினர், பொலிசாரின் தலையீட்டால் அவர்கள் ஓடினார்கள். கூட்டணியின் பயங்கரவாதிகளே இப்புலிப் படையினர்.

### ஐ. தே. கவுக்கு பயமுறுத்தல்

ஐ. தே க.வினரை வற்புறுத்தி, கொலைப்பயமுறுத்தி கட்சியிலிருந்து அவர்களை விலக்க முயற்சிக்கிறார்கள். இப்படித்தான் கூட்டணி வாக்குப் பலம் பெற்றது.

### கொடியுடன் செல்ல முடியவில்லை

ஐ. தே. க. அபேட்சகர்கள் வடக்கில் தமது கார்களில் கொடியுடன் செல்ல முடியவில்லை என்பதை வருத்தத்துடன் நான் இங்கு கூறுகிறேன். சாரதிகள் மிரட்டப்பட்டனர், பூரணமாக அரசியல் வேலைகளில் ஈடுபட முடியாதபடி தடுக்கப்பட்டனர். நீதி, நியாயம் வடக்கில் இல்லை பொலிசாரும் பயந்த நிலையிலேயே அங்கு இருக்கின்றனர். இங்கு முகமூடியுடன் வந்து சமாதானம்பற்றி பேசுகிறீர்கள் நீங்கள்.

### எவரும் நாட்டில் எங்கும் வாழலாம்

எந்த இனத்தவருக்கும் இந்த நாட்டில் எங்கும் வாழ உரிமை வேண்டும்; தொழில் செய்ய, நிலம் வாங்க உரிமை வேண்டும். தமிழர் இந்நாட்டில் எங்கும் செல்ல முடியும். வடக்கில் வாழ்ந்து கொண்டு மற்றைய இடங்களில் வியாபாரமூலம் உழைக்கிறார்கள்: அரசு உத்தியோகம் பார்க்கிறார்கள். வழக்குப் பேசுகிறார்கள், அவர்களுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கப்படவில்லை. ஆனால் வடக்கு, கிழக்கில் ஒரு சிங்கள மகன் காணி வாங்க முடியுமா? அரசியல் அதிகாரத்தை அப்பகுதிகளில் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளே இவை. இவர்கள் தீவிரவாதிகள். அரசியல்வாதிகள் அல்லர் இனவாத, பயங்கர தீவிரவாதிகளே.

பௌத்தராகிய நாம் விகாரை அமைத்தால் அங்கு விஷ்ணுவுக்கும் கோவில் கட்டுகிறோம், ஆனால் இவர்கள் விகாரைகளை உடைக்கிறார்கள். புலிகளைவிட மோசமானவர்கள் இவர்கள்.

கடந்த அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியது. அது இன்று ஒரு தேசியப் பல்கலைக்கழகமாக இயங்குகிறதா? சிங்கள மாணவர்களை அடித்து விரட்டினார்கள், ஒரு சிங்கள மாணவராவது அங்கு கல்வி கற்கும் நிலை இல்லை. அது ஓர் இனவாத பல்கலைக்கழகமே. இந்தப்பயங்கரத்தை ஏனைய பகுதிகளிலும் மக்கள் தொடங்கினால் நிலைமை எப்படியிருக்கும்?

### மாரசிங்காவுக்கு பயமுறுத்தல்

1977 பெப்ரவரி 28ம் திகதி மாரசிங்க என்ற மாணவன் பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது, "நீ ஒரு சிங்

[6ம் பக்கம் பார்க்க]

---

## ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும்

[யாழ்ப்பாணம்]

மாவிசந்தியில் அமைந்திருக்கும் தென்னலவை அறிவகத்தின் பெயர் "தென்னலவை சனசமூகநிலையம்" என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் முதலாவது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும். அன்று பிற்பகல் 2 மணியளவில் விளையாட்டுப்போட்டியும் மாலை 7 மணியளவில் பரிசளிப்பு விழாவும் தொடர்ந்து கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். விசேஷ பேச்சாளர்களாக திரு. க. துரைரத்தினம் எம் பி. திரு. க, இராஜலிங்கம் எம். பி, மில்க்வைற் அதிபர் திரு கே. கனகராசா, உதவிஅரசாங்க அதிபர் திரு. ஏ குணநாயகம், உட்பட மற்றும்பலர் கலந்துகொள்வர்.

---

## உதைபந்தாட்டப் போட்டி

[உரும்பராய்]

உரும்பராய் மின்னல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியை நடாத்த முன் வந்துள்ளது.

சாம்பியனாக தெரிவுசெய்யப்படும் கழகத்துக்கு 1000 ரூபா ரொக்கப்பரிசும் வெற்றிக்கேடயமும் வழங்கப்படவுள்ளது.

---

ஆர். எம். இமாம்
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மாகிலாமணி, 110 புங்கங்குளம் ரோட் யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணச்சொத்து) இல. 3446
நியாயாதிக்கம் )

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக நேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 23 ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்

தயாரித்தது:
ஆர். எம். இமாம்
மனுதாரின் பதிவு பெற்ற தரணி. 2545

---

கிரிக்கெட் போட்டி:

# யா. இந்து-மாத்தளை விஜயா இன்று மோதுகின்றன

[யாழ்ப்பாணம்]

பதினேழு வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட் போட்டியில், யாழ். இந்துக்கல்லூரியும் மாத்தளை விஜயாகல்லூரியும் இன்று மோதிக்கொள்கின்றன.

அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட்சங்கம் நடத்தும் பாடசாலைகளுக் கிடையிலான கிரிக்கெட் போட்டித்தொடரில், யாழ். இந்துவும் மாத்தளை விஜயாவும் இன்றுகாலை ஒன்பதரை மணிக்கு "மோதி"க் கொள்கின்றன. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், இந்துக்கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கு கே. பாலக்குமார் தலைமை வகிக்கின்றார்.

---


Rio (Jaffna) Phone : 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

நாகம்ஸ் [கன்னாதிட்டி]
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சீதாராம கலியாணம்

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-ராதாசலூஜா
இதயக்கனி

21-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன் 466 தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்மன் கலர் புதிய பிரதி]

REGAL (Jaffna)
2nd CROWDED WEEK
Daily 6-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15 9-30.
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனு
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்

3-வது வெற்றி வாரம்!
தினசரி 4 காட்சிகள்
சாந்தி (யாழ்நகர்)
இராஜேந்திர குமார் — ஹேமமாலினி — பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

தினசரி 4 காட்சிகள்
பல்லாயிரம் யாழ் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திரையிடப் படுகின்றது.
மனோகரா (யாழ்நகர்)
ஸ்ரீகாந்த் - பிரமிளா லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
[புதிய பிரதி - ஈஸ்மன்கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: [illegible] 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 1-30, 3-30 6-30 & 9-45
ஜெமினி—வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

## கிழக்கு மாகாணத்தில் இந்த ஆண்டிலேயே பல்கலைக்கழகம் அமையும்

[கொழும்பு]

கிழக்குமாகாணப் பல்கலைக் கழகம் இந்த ஆண்டிலேயே நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையும், நீதியமைச்சர் திரு. தேவநாயகமும் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தினாவை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வந்தாறுமூலையில் இந்தப் பல்கலைக்கழகத்தை 1980ம் ஆண்டு நிறுவுவதென்று முன்பு முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பல்கலைக்கழகத்துக்கென முதல் நான்கு ஆண்டுகள் 10 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறதாம்.

## புராதனப் பொருட்களின் கண்காட்சி
### இன்று நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

புராதனப் பொருள்களின் கண்காட்சியொன்றை கல்வி அமைச்சர் திரு நிஸங்கா விஜயரத்ன இன்று பிற்பகல் மினுவரங்கொடையில் திறந்து வைப்பார்.

இக்கண்காட்சி விரைவில் புராதனப் பொருள்களின் ஒரு நூதனசாலையாக மாற்றம் பெறவிருக்கிறது.

மேற்படி கண்காட்சி சம்பந்தமாக வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. கி. எஸ். சுப்பிரமணியம் "ஈழநாடு" நிருபரிடம் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் தங்கள்வசமுள்ள புராதனப்பொருள்களை எம்மிடம் ஒப்படைத்தால் இக்கண்காட்சியில் இவற்றினை வைப்பதற்கு உதவமுடியும் என்று கூறினார்.

"விவசாயம், வீட்டுப் பாவனை, கிராமியக்கல்வி, கிராமியவிளையாட்டு, தொழில்முறை, நாட்டுவைத்தியம், மீன்பிடித்துறை போன்ற பல்வேறு துறைகளையும், பிரதிபலிக்கும் பழைமையான பாத்திரங்கள், நூதன கருவிகள், விளையாட்டுப்பொருள்கள் மற்றும் வித்தியாசமான புராதன 'மணம்' வீசும் பல்வேறு பொருள்களையும் ஒப்படைத்தால் அவற்றினை மேற்படி கண்காட்சிச்சாலையில் வைக்க முடியும்" என்று விளக்கிய திரு. சுப்பிரமணியம், தத்தமது பகுதிகளிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இப்பொருள்களை ஒப்படைத்து ரசீது பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவற்றைத் தாங்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்றும் கூறினார்.

## கூட்டணியும்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

களவன். அமர்ந்து பிரயாணஞ் செய்யமுடியாது. தமிழன்தான் அமர்ந்துசெல்ல முடியும் என்று அவனை விரட்டினர்.

இதைக் கேட்கையில் சிங்கள மக்களின் கண்களில் கண்ணீர் வருகிறது.

இது இத்துடன் முடியவில்லை. 1977 மார்ச் 1ந் தேதி விடுதியிலிருந்து வளாகத்துக்கு செல்கையில் கூட்டணியைச் சேர்ந்த "புலி"கள் 20 பேர் பொல், சயிக்கிள் செயின் முதலியவற்றால் தாக்கினர். மாரசிங்க வீழ்ந்த போது 'கிறிஸ்'கத்தியால் குத்தினர். வெளிவந்த குடலை பிடித்துக்கொண்டு அம் மாணவன் ஓடினான், அந்த மாணவனின் நிலை என்ன இன்று? அவனின் கால்கள் வழங்கா!

இப்போது இதைவிட மோசமான நிலையே அங்கு நிலவுகிறது. 15 ஆயிரம் 20 ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்த அப்பகுதியில் இன்று ஒரு சிங்களவரைத்தானும் தேடியும் காணமுடியாது. கூட்டணியினரின் நடவடிக்கைகளால் வடக்கில் எவ்வித நல்ல நிலைமையும் இல்லை, அதனாலேயே இச் சட்டம் கொண்டுவரப்படுகிறது, அங்குள்ள பயங்கரவாதத்துக்கு ஏற்ப சிங்கள மக்களும் ஆரம்பித்தால் அது எங்கே முடியும்? இதை நீங்கள் சிந்தியுங்கள்,

உங்களுக்கு எங்கு செல்வதற்கும் பாதுகாப்பு இருப்பதால் நீங்கள் இப்படி நடக்கிறீர்கள்.

வவுனியாவுக்கு இப்பால் முகமூடியுடன் உலாவுகிறீர்கள் உங்களின் 'ஜீப்'புகளும் அப்படித்தான், வடக்கில் தமிழ் ஸ்ரீ, தெற்கில் சிங்கள ஸ்ரீ, உங்களின் சகலவேலைகளுமே இப்படித்தான்.

இங்கே அமைதியைப் பற்றி நியாயத்தைப்பற்றி - பாதுகாப்பைப்பற்றி பேசுவீர்கள, அங்கே கொலை நடவடிக்கைகளுக்காகவே பேசுவீர்கள், [ம]

## பொலிஸ் வலையில் சிக்கிய பெண்கள்
### ஏழு பேருக்கு விளக்கமறியல்

[மாவிட்டபுரம்]

துர்நடத்தையின் நோக்கமாக இரு டாக்ஸிகளில் காங்கேசன் துறைக்கு வந்த 4 இளம் யுவதிகள் பொலிசாரின் வலையில் சிக்கிக்கொண்டனர், மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

காங்கேசன் துறை சுங்கஇலாகாவின் முன்பாக நின்ற இரு டாக்ஸிகளின்மீதும், அவற்றினுள் இருந்த இளம் யுவதிகள் மீதும் அவ்வழியால் வந்த காங்கேசன்துறைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்களாகிய விக்கிரமநாயக்கா, ஆரியபாலா ஆகியோருக்கு சந்தேகம் ஏற்படவே அவர்களை டாக்ஸியுடன் கைதுசெய்து விசாரணை செய்தனர்.

மேற்படி 4 இளம் யுவதிகளும் அவர்களுடன் வந்த ஒருவரும் டாக்ஸி சாரதிகள் இருவரும் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்ஆஜர் செய்யப்பட்ட சமயம் இம்மாதம் 29ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.


## மரண அறிவித்தல்
### திருமதி கிருபைரத்தினம் சரவணமுத்து

டிறிபேர்க் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு கே. எஸ். சரவணமுத்து அவர்களின் அருமைமனைவி கிருபைரத்தினம் (கிரிபை அக்கா) காலமாகிவிட்டார். பிரேதசேம ஆராதனை 24-5-1979 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாருடைய இல்லத்தில் நடைபெறும். அறிவிப்பாளர்: A. S. பாலரட்ணம், "காந்தவாசா" சாவகச்சேரி. 2546


# தமிழர் பண்பாட்டை இங்கு மிகுதியாகக் காண்கிறோம்
## யாழ் வந்த இந்தியப் பேராசிரியர்கள் கருத்து

[யாழ்ப்பாணம்]

தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு." அந்த நல்ல குணத்தையும் பண்பாட்டையும் அதிக அளவில் இலங்கையில் காணக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு நேற்று காலை யாழ். கச்சேரி மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சென்னை ஸ்ரெல்லாமேரி மகளிர் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியைத் திருமதி சந்திரா பார்த்தசாரதி கூறினார்.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ். கச்சேரி உயர் அதிகாரிகளான, காரியாலய உதவியாளர் திரு. ஈ. சபாரெத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன், பொதுசன தொடர்புகள் அதிகாரி திரு. எஸ். சண்முகசுந்தரம் ஆகியோருடன் சென்னை பல்கலைக்கழக மொழியாசிரியர் சங்கத்தைச் சேர்ந்த இருபது பேராசிரியர்களுடன் இவர்களை அழைத்துவந்த திருவாளர்கள் ஆர். ருஜாராம், ரி. தெய்வேந்திரம், சின்னையா சிவகணேசன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

சென்னை பல்கலைக்கழக மொழியாசிரியர் சங்க செயலாளர் கலைமணி திரு. வி. கிருட்டினசாமி பேசுகையில், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, அரபு மொழிப் பேராசிரியர்கள் கொண்ட முப்பது பேர் இலங்கையின் பல பாகங்களையும், பார்த்துச் செல்வதற்காகவும், இங்குள்ள மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் இலங்கையிலுள்ள சரித்திர சமய சம்பந்தமான விடயங்களையும் மக்களையும் அறிந்து செல்வதற்காகவும் நாம் இலங்கை வந்துள்ளோம்.

கடந்த இரண்டு நாட்களாக நாம் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பல பௌத்த இந்து ஆலயங்களைத் தரிசித்துவிட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளோம்.

யாழ். பல்கலைக் கழகத்திற்குச் சென்றபோது அங்கு சமயக்கல்வி முக்கிய பாடமாகப் போதிக்கப்படுவது கண்டு மிகவும் பெருமைப்படுகிறோம். சமயபாடத்தைப் போதிப்பதால் சமயக்கல்வி கற்போர் பண்புடையவர்களாகத் திகழ முடியும். அதேபோல் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் போதிக்கப்படுவதால் இங்குள்ள மக்கள் நல்ல ஆங்கில அறிவுள்ளவர்களாகத் திகழ்கிறார்கள். அதனால் மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும் என்றார்.

சென்னைப் பல்கலைக் கழக மொழியாசிரியர் சங்க தலைவர் பேராசிரியர் திரு. ஜீ. வடிவேலாயுதன் பேசுகையில் நாம் ஈழநாட்டின் தென்பகுதியிலிருந்து வடபகுதிவரை சுற்றுலாவின்போது பார்வையிட்டுள்ளோம். யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது தமிழ்மக்கள் எம்மை உபசரித்த விதத்திலிருந்து நாம் யாழ்ப்பாணத்தில் இருப்பதுபோல் இல்லாது நாம பிறந்த மண்ணில இருப்பதுபோல் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியுள்ளோம.

யாழ். கச்சேரிக்கு வந்தபோது மாவட்டச் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி எம்மை கரம் கூப்பி வரவேற்றவிதம் எம்மை மேலும் புளகாங்கிதம் அடையச்செய்துள்ளது.

திரு. யோகேந்திரா துரைசுவாமி இந்தியாவில் பல வருடங்கள் உயர்பதவிவகித்து இந்திய மக்களின் அன்பைப் பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு பெரியார் இன்று எம்மை வரவேற்கக்காத்திருப்பார் என நாம கருதவில்லை. அவரே நேரில் வந்து எம்மை வரவேற்றது எம்மையும், எமது குழுவையும் பெருமைப்படுத்துவதாக உள்ளது நாம இந்தியா சென்றாலும் இவ்வரவேற்பை நினைத்துப் பூரிப்பெய்துவோம் என்றார்.

ஆங்கில மொழி விரிவுரையாளர் செல்வி ரி வி லெட்சுமியும் பேசினார்.

மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி வரவேற்புரை நிகழ்த்தினார். [கொ]

## யு. எஸ். அதிபர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு எடுத்துக் கூறுவது எமது கட்சியின் செயலதிபரும் இலங்கை மக்கள பிரதிநிதிகள சபையில் எதிர்க் கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் எடுத்துக் கொண்ட பணியைத் தொடர்ந்து செய்யவே நான் இங்கு வந்துள்ளேன்.

எமது பிரச்னையில் இந்த மாநில மக்களும், பிரதிநிதிகளும் காட்டிய அக்கறை குறித்து ஈழத் தமிழ் மக்கள நன்றியுடையவர்களாய் இருப்பார்கள உங்களின் இந்தப் பணியை எம்மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள என்றும் கூறினார். [ம]

## தஞ்சையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு அன்பில் தர்மலிங்கத்துக்கு மாற்று வேட்பாளராக திரு எல் கணேசன் என்பவர் மனு தாக்கல்செய்துள்ளார்.

நாகையில் அ இ அ தி மு க சார்பில் திரு எம மகாலிங்கம் வேட்புமனு தாக்கல்செய்துள்ளார்

கே அமிர்தலிங்கம் என்பவர் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிடுகின்றார் திரு பன்னீர்செல்வம் என்பவர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார் காங்கிரஸ் ஐ கட்சி போட்டியிடவில்லை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கே முருகையா போட்டியிடுகிறார்

வேட்புமனுக்கள் வாபஸ் பெறும்நாள் 26ம் திகதியாகும் அடுத்த மாதம் 17ம் திகதி தேர்தல் நடைபெறும்.

## இந்த ஆசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் என்ற நம்பிக்கையில் இருந்த இவ்ஆசிரியர்கள் தற்போது கவலையடைந்துள்ளனர்

இலங்கையில் அதிஉயர்பதவி வகிக்கும் ஜனாதிபதி என்ற முறையில் காரணமின்றி பின்போடப்பட்டுவரும் ஆசிரியர்களின் இச்சிறிய பிரச்னையை தாங்கள் முன்னின்று ஆசிரியர்களின் துயர் தீர்ப்பீர்கள் என்று நம்புகிறேன். (கொ)

## பொலிஸார் திரும்பினர்

(மாவிட்டபுரம்)

உள்ளூராட்சித் தேர்தலின் காரணமாக களுத்துறை பேலியகொடை பொலிஸ் பயிற்சிநிலையங்களிலிருந்து வடபகுதிக்கு வந்திருந்த விசேட பொலிசார் தென்னிலங்கைக்குத் திரும்பினர்கள்.

விசேட ஜீப்வண்டிகளில் வந்திருந்த அவர்கள் தேர்தல் சமயத்தில் தீவிர கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேர்தலையடுத்து அவர்கள் தென்னிலங்கைக்குத் திரும்பினர்கள்

## கிணற்றில் மண்ணெண்ணை ஊற்று?

[யாழ்ப்பாணம்]

பல ஆண்டுகளாக குடிப்பதற்கு பாவிக்கப்பட்டு வந்த பத்தடி ஆழமுள்ள கிணறொன்றில் திடீரென மண்ணெண்ணை ஊறத் தொடங்கியிருப்பதாக நம்பப்படுகிறது

சுண்டிக்குளியிலுள்ள மதியூஸ் வீதி, மூளாய் லேனில் உள்ள கிணறொன்றிலேயே இவ்வாறு மண்ணெண்ணை காணப்படுகிறதாம். நீரின் மேல்பாகத்தில் செந்நிறம் கலந்த திரவம் ஊறிவருவதை அறிந்த திருமதி மெனிக்கம்மா செபரத்தினம் என்பவர் மண்ணெண்ணெயின் தன்மை இதில் இருப்பதாக கிராம சேவகருக்கு அறிவித்துள்ளார். பெருந்தொகையான மக்கள் அங்கு சென்று கிணற்றைப் பார்வையிட்டு வருகிறார்கள். (செ)

## அடையாள வேலைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள இன்று அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொளகிறார்கள. இதுசம்பந்தமான ஒரு துண்டுப் பிரசுரத்தையும் இவர்கள வெளியிட்டுளளனர்,

## வில்லூன்றி விநாயகர் தேர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தேர் உற்சவம் இன்று காலை நடைபெறும்.


## அந்தியேட்டி அழைப்பிதழ்

அமரர் வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் அந்தியேட்டி வைபவம் இன்று வியாழக்கிழமை (24-05-79) காலை, கிரிமலையிலும் பகல் சபிண்டிகரணம், தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்திலும் நடைபெறும் உற்றார், நண்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

மனைவி, மக்கள்

24-5-79 2547


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No: 49, Telegram: Eelanadu Telephone: 389.